செ.வெ.எண்.46 நாள்: 21.04.2020

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள், அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், மருத்துவமனைகள் பிரதிநிதிகள் பங்கேற்ற மாவட்ட நெருக்கடி கால நடவடிக்கை குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள், அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், மருத்துவமனைகள் பிரதிநிதிகள் பங்கேற்ற மாவட்ட நெருக்கடி கால நடவடிக்கை குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.04.2020) நடைபெற்றது. கூட்டத்தில் அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகள், கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட பொருட்களை கொண்டு வர ஏதேனும் சிரமங்கள் உள்ளதா என்பதை கேட்டறிந்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் சுய ஊரடங்கு உத்தரவு மே 3ம்தேதி வரை நீடிக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த காலகட்டத்தில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே செயல்பட்டு கொண்டிருந்த தொழிற்சாலைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 20ம் தேதிக்கு பிறகு அனுமதி அளிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தவிர வேறு தொழிற்சாலைகள் இயங்க அனுமதி இல்லை. நமது மாவட்டத்தில் உப்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கபட்டள்ளது. அதேபோல் தீப்பெட்டி தொழிற்சாலைகள் குறைந்த அளவு பணியாளர்களுடன் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு பேக்கரி காலை 6 மணி முதல் 1 மணி வரை திறந்து வைக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நமது மாவட்டத்திலும் பேக்கரி திறந்து வைக்கப்படுகிறது. சுய ஊரடங்கு உத்தரவு காலத்தில் காய்கறிகள், மாட்டு தீவணங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்தால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மக்காசோளம் பயிர் வகைகள் அதிக அளவில் பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக தெரிய வந்தால் சம்பந்தப்பட்ட நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட தனிமைபடுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணி பெண்கள், முதியோர்கள் உள்ளிட்டோர்களுக்கு அவசர கால உதவிக்கு அவசர கால ஊர்தி இயக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கட்டாயமாக முகமூடி அணிந்து வர வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டத்திலும் நாளைய தினத்தில் இருந்து தீவிரமாக முகமூடி அணியாதவர்களை கண்காணித்து எச்சரிக்கை விடப்படும். அதன் பின்னரும் முகமூடி அணியாமல் இருந்தால் அபதாரம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும். காய்கறிகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் ஏதும் இருந்தால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுபாட்டு அறையில் புகார்கள் தெரிவிக்கலாம். தமிழக அரசு பொதுமக்களுக்கு முகமூடி அவசியம் மற்றும் பொது இடங்களில் அசுத்தம் செய்வது தவிர்க்க வேண்டும் என தெரிவித்துள்ளது. நமது மாவட்டத்திலும் முகமூடி அவசியம் மற்றும் பொது இடங்களில் அசுத்தம் செய்வதால் ஏற்படும் சுகாதார கேடுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தபட உள்ளது. ஏற்கனவே கொரோனா தொற்று நோய் பரவால் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு பதாகைகள் பல்வேறு

இடங்களில் வைக்கபட்டுள்ளது. பயிர் காப்பீடு தொகை பெற தகுதி இருந்து கிடைகாத விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் கொண்டு வரும் வாகனத்திற்கு எந்த ஒரு தடையும் விதிக்கவில்லை. தொழிற்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் சமூக இடைவெளியை பின்பற்றி முகமூடி அணிந்து குறைந்த பணியாளர்களுடன் தொழிற்சாலைகளை இயக்க வேண்டும். நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களை அனைவரையும் சமூக இடைவெளியை பின்பற்றி வாகனத்தில் கொண்டு செல்ல வேண்டும். பணிகளின்போது சமூக இடைவெளியை கட்டாயமாக பின்பற்றி பணியாற்ற அறிவுறுத்த வேண்டும். நமது மாவட்டத்தில் 134 நடமாடும் காய்கறி அங்காடி வாகனம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இதனை முழுமையாக பயன்படுத்திகொண்டு தேவையின்றி வீட்டில் இருந்து வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் ஊரடங்கு உத்தரவு காலத்தில் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பேசினார்.

அதனைத்தொடர்ந்து எம்பவர் இந்தியா சார்பில் தயாரிக்கப்பட்ட கொரானோ வைரஸ் தொற்று நோய் குறித்த விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டார்.

கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு.வி.பி.ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.திருவாசகமணி, இணை இயக்குநர்கள் திரு.முகைதீன்(வேளாண்மைத்துறை), திருமதி.சந்திரா (மீன்வளத்துறை), திரு.சத்யநாராயணன் (கால்நடை பராமரிப்புத்துறை), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி.அமுதா (பொது), திரு.பாலசுப்பிரமணியன் (வேளாண்மை), மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.மாரியப்பன், எம்பவர் இந்தியா சார்பில் திரு.எம்பவர் சங்கர், தனியார் மருத்துவமனை மருத்துவர்கள், தன்னார்வலர்கள், விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.